# இந்தியத் துணைத் தூதரகம்

## யாழ்ப்பாணம்

## <u>ஊடக அறிக்கை</u>

## <u>உலக சுற்றாடல் நாள் - 2019</u>

உலக சுற்றாடல் நாளை முன்னிட்டு காந்தி@150 நிகழ்வுகளின் தொடர்ச்சியாக யாழ் இந்தியத் துணைத் தூதரகம் மரம் நடும் செய்கையை முன்னெடுத்திருந்தது.

மேதகு ஆளுனர் முனைவர் சுரேன் இராகவன் அவர்களின் பசுமைப்பாதை திட்டத்தின் கீழ், 10000 மரங்கள் ஏ9 சாலையில் நடும் நிகழ்ச்சி மாங்குளத்தில் இன்று காலை இடம்பெற்றது. இதில் ஆளுனர், யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் மரக்கன்றுகளை நட்டனர். விழாவில் பேசிய ஆளுனர் மகாத்மா காந்தியின் பங்களிப்பை நினைவு கூர்ந்தார்.

இதன் தொடர்ச்சியாக மற்றொரு மரம் நடும் விழாக்கள் மகாத்மா காந்தியின் ஞாபகார்த்தமாக கிளிநொச்சி விவசாய, பொறியியல், ஜேர்மன் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் இலங்கை மைய வங்கி கிளை அலுவலகத்திலும் நடைபெற்றது. இதில் தூதுவர் பாலச்சந்திரன், பேராசிரியர் மிகுந்தன், விவசாய திணைக்கள இயக்குனர் சிவகுமார், இலங்கை ஜேர்மன் பயிற்சி கல்லூரி அதிபர், மற்றும் பல பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் பங்குபெற்று நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை நட்டனர். மாணவர்கள் இம் மரங்களை நீருற்றி நிலையாக பராமரிப்பதற்கான உறுதி மொழியும் எடுத்துக் கொண்டனர்.

3. நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் காணொளிகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

***